யுவ்ராஜ்

விவசாய பூமிகள் அனைத்தும் இன்று ரியல் எஸ்டேட் மனைகளாக மாறியுள்ள நிலையில், பழங்குடியின மக்களின் நிலங்களையும் பிளாட்டுகளாக மாற்றி வருகின்றன ரியல் எஸ்டேட் நிறுவனங்கள்.

தமிழகத்தில் மற்ற மாவட்டங்களுடன் ஒப்பிட்டு பார்க்கும் போது கோவையில்தான் ரியல் எஸ்டேட் தொழில் கொடி கட்டி பறக்கிறது. காரணம் கோவையின் அழகும், சீதோஷ்ண நிலையும், மேற்குத் தொடர்ச்சி மலையின் ரம்மியமும்தான்.

இதன்காரணமாக கோவையில் நூற்றுக்கும் மேற்பட்ட ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் உள்ளன. விவசாயிகளுக்கு ஒரு தொகையை கொடுத்துவிட்டு, விவசாய பூமிகளை பிளாட்டுகளாக மாற்றி வருகின்றனர். இதனால் கோவையில் விவசாய நிலங்களின் பரப்பு கடந்த ஐந்து ஆண்டுகளில் வெகுவாக குறைந்துவிட்டது.

விவசாய பூமிகளை முடித்துக்கட்டிய ரியல் எஸ்டேட் முதலாளிகள், தற்போது மலைவாழ் மற்றும் பழங்குடி மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடத்தையும் அபகரித்து வருகின்றனர்.

இது குறித்து தென்னிந்திய பழங்குடி மக்கள் சங்க தலைவர் முருகவேலு நம்மிடம் பேசினார்.

“கோவையை அரணாகச் சுற்றியுள்ள மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள மூன்றாயிரம் ஏக்கர் நிலத்தை பழங்குடி இன மக்களுக்கு அப்போதைய ஆங்கிலேயர் அரசு பட்டா போட்டுக் கொடுத்தது. அதனை விவசாய நிலங்களாக மாற்றிய பழங்குடி மக்கள், விவசாயம் செய்து பிழைப்பு நடத்தி வந்தனர். காலப்போக்கில் விவசாயம் கொஞ்சம் கொஞ்சமாக குறைந்து போனது. ஆன போதும் பழங்குடி மக்கள் விவசாயத்தைக் கைவிடாமல் செய்து வந்தனர். மழை குறைந்த போதும், அதற்கேற்ற விவசாயத்தை மேற்கொண்டனர். சமீபகாலமாக விவசாயம் அவர்களுக்கு கை கொடுக்காத நிலையில் வெளியில் கூலி வேலைக்குச் செல்ல ஆரம்பித்தனர்.

இதைப் பார்த்த ரியல் எஸ்டேட் காரர்கள், பழங்குடி மக்களின் வறுமையை பயன்படுத்தி அவர்களது நிலங்களை அபகரித்து வருகின்றனர். கோவையில், பெரியநாயக்கன்பாளையம், துடியலூர் மற்றும் 24.வீரபாண்டி ஆகிய பகுதிகளில் பழங்குடி மக்களுக்குச் சொந்தமான 74 ஏக்கர் நிலத்தை குறைந்த விலைக்கு வாங்கியுள்ளன ரியல் எஸ்டேட் நிறுவனங்கள். இவை அனைத்தும் வனத்துறை செட்டில்மென்ட் பட்டா பெற்ற நிலங்கள். இந்த நிலங்களை விற்கவோ வாங்கவோ வனத்துறை சட்டத்தில் இடமில்லை.

ஆனால் வனத்துறை அதிகாரிகளின் ஒத்துழைப்போடு ரியல் எஸ்டேட் நிறுவனங்கள் இந்த பூமிகளை பழங்குடி மக்களிடம் இருந்து குறைந்த விலைக்கு வாங்கியுள்ளது. மூன்றாண்டுகளுக்கு முன் ஒரு ஏக்கர் நிலத்தை வெறும் பத்தாயிரம் ரூபாய் கொடுத்து மக்களை ஏமாற்றி சில

# பிளாட்டுகளாக மாறிய பழங்குடி மக்களின் நிலங்கள்!

